Registered a as News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | பங்குனி 09 | [22-03-1993] | திங்கட்கிழமை | ஓசை 32

## அரச செயலகங்களை மூட இராணுவ மேலிடம் உத்தரவு

செட்டிகுளம பகுதியில் உள்ள அரசாங்க அலுவலகங்களை தற்காலிகமாக மூடிவிடுமாறு இராணுவ மேலிடம் அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. செட்டிகுளம் பகுதியில் மேலும் சில சதுரமைல்தூரம் இராணுவ விஸ்தரிப்பு நடத்திய பின்னரே தம்மால் நிலையான பாதுகாப்புத்தர முடியும் என்றும் இதற்காக மீண்டும் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொண்டுசில பகுதிகளை கைப் பற்றவேண்டும் என்றும் இராணுவம் அறிவித்துள்ளதாம். தற்போது செட்டிகுளம் பகுதியில் செயல்படும் அரச அலுவலகங்கள் செயல்படவில்லை. இதேசமயம் பாதுகாப்பை பலப்படுத்தாமல் சிங்களவரை குடியேற்றுவதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

# 3 ராட்சத ரஷ்ய ஹெலிகள் கொழும்பு வந்து சேர்ந்தன

### ஆயுதங்களும், பயிற்சியும் வழங்க மொஸ்கோ முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் கொள்வனவு செய்த எம். ஐ. 8 ரக புதிய ராட்சத ரஷ்ய உலங்குவானூர்திகள் மூன்று கொழும்பு வந்து சேர்ந்தன. இதேவேளை, சிறிலங்கா ஆயுதப்படையினருக்கு போர்த் தளபாடங்களையும்அவற்றிற்கானபயிற்சியையும் வழங்குவதற்கு ரஷ்யா தயாராக இருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

1971 ஆம் ஆண்டு ஜே. வி. பி. கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு இரு கே. 26 ரக உலங்குவானூர்திகளையும், மிக் ரக போர்விமானங்களையும் சிறிலங்காவிற்கு ரஷ்யா வழங்கிய பின்னர், இரண்டு தசாப்தங்களின் பின்பு தற்பொழுதே இராணுவ உதவிகளை வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது. இந்த வகையில் முதலில் உலங்குவானூர்திகளும் உதிரிப் பாகங்களும், மற்றும் இயந்திர சாதனங்களும் சிறிலங்காவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.


இந்த வகையில் மூன்று எம். ஐ. 8 ரக புதிய உலங்குவானூர்திகள் கடந்த திங்களன்று ஏ. என். 124 ரக ராட்சத சரக்கு விமானத்தின் மூலம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கொண்டுவந்து இறக்கப்பட்டன. இம் மூன்று உலங்குவானூர்திகளும் சுமார் 4 மில். அமெரிக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நிரந்தர நியமனம்

1988 இல் நியமனம் பெற்ற பட்டதாரி பயிலுனர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற பரீட்சையில் 50 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கும் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் சேவையாற்றியவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.



ரஷ்சிய எம். ஐ. 8 ராட்சத ஹெலி

## இணைப்பை கோருவோர் நாட்டுக்கு எதிரானோரே

### -பிரதம சங்க நாயக்கர் கருத்து

[கொழும்பு]

இந்த நாட்டுக்கு எதிரானவர்களே வடக்கும் கிழக்கும் இணைக்கப்படவேண்டும் எனக் கோருகின்றனர். தமிழ் பிரிவினைவாதிகள் இதனை கோருகின்றனர். மக்கள் மத்தியில் செல்வாக்கில்லாத சிங்களவர்களாக பிறந்தசிலர் இதற்கு ஆதரவு அளிக்கின்றனர். இவ்வாறு திம்புலுகல்ல சங்கநாயக்க பிரதம சங்கநாயக்கர் வண. கித்தலகம நாயக்க தேரோ தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து கருத்து தெரிவித்த அவர் குறுகிய அரசியல் நலனுக்காக நாட்டின் ஒருமைப் பாட்டை எந்த ஓர் அரசியல் வாதியும் பேரம்பேச முடியாது என்றார்.

இணைப்பு குறித்து கருத்து தெரிவித்த மல்வத்தைப்பீட மகாநாயக்க தேரோ வண. ரம்புக்வெல்ல விபஸி தேரர், ''பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையின் மூலம் ஐ.தே.கவும், சுதந்திரக்கட்சியும் இணைப்பை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுடனான நல்லுறவு

# ஆயுதக் கொள்வனவில் சிறிலங்காவிற்குபெருவாய்ப்பு

[கொழும்பு]

சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இந்தியாவிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கமான நல்லுறவும் விடுதலைப் புலிகளுடன் இந்தியா கடைப்பிடித்துவரும் கடும் போக்கும் உலக அரங்கில் சிறிலங்கா அரசிற்கு ஆயுத கொள்வனவில் இருந்த தடைகளை நீக்கியுள்ளதாக கொழும்பில் உள்ள அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் போர் ஆரம்பித்ததிலிருந்து மேற்கு நாடுகளை சார்ந்திருந்த சிறிலங்கா தற்பொழுது கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்யமுன்வந்துள்ளதாகவும், இதற்கு இந்தியா

## 80 பேர் மயக்கம்

கொழும்பிலிருந்து கடந்த வாரம் இரவு ரயிலில் வவுனியா வந்த பயணிகள் ரயிலில் தனியாரினால் விற்பனை

## அன்னை பூபதி நினைவாக சிரமதான நிகழ்ச்சிகள்

(தென்மராட்சி)

தியாகதீபம் அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாட்கள் தென்மராட்சி பகுதியில் சகல இடங்களிலும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இல்லங்களுக்கு முன் மக்கள் வீடு அமைத்து சிவப்பு, மஞ்சள் கொடி பறக்க விட்டவாறும் இருக்கின்றனர். அவ்வீடுகளில் அன்னை பூபதியின் உருவப் படங்களும் வைக்கப்பட்டுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பனாகொடை இராணுவ முகாமில்

# தெரிவுக்குழுவிலிருந்து

போர்விமானங்களையும் சிறிலங்காவிற்கு ரஷ்யா வழங்கிய பின்னர், இரண்டு தசாப்தங்களின் பின்பு தற்பொழுதே இராணுவ உதவிகளை வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது. இந்த வகையில் முதலில் உலங்குவானூர்திகளும் உதிரிப் பாகங்களும், மற்றும் இயந்திர சாதனங்களும் சிறிலங்காவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த வகையில் மூன்று எம். ஐ. 8 ரக புதிய உலங்குவானூர்திகள் கடந்த திங்களன்று ஏ. என். 124 ரக ராட்சத சரக்கு விமானத்தின் மூலம்

இந்தியாவுடனான நல்லுறவு

# ஆயுதக் கொள்வனவில் சிறிலங்காவிற்கு பெருவாய்ப்பு

[கொழும்பு]

சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இந்தியாவிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கமான நல்லுறவும் விடுதலைப் புலிகளுடன் இந்தியா கடைப்பிடித்துவரும் கடும் போக்கும் உலக அரங்கில் சிறிலங்கா அரசிற்கு ஆயுத கொள்வனவில் இருந்த தடைகளை நீக்கியுள்ளதாக கொழும்பில் உள்ள அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் போர் ஆரம்பித்ததிலிருந்து மேற்கு நாடுகளை சார்ந்திருந்த சிறிலங்கா தற்பொழுது கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்யமுன்வந்துள்ளதாகவும், இதற்கு இந்தியாவின் நட்பு அவர்களுக்குப் பேருதவி புரிவதாகவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பல பீரங்கிப் படகுகளையும் உலங்கு வானூர்திகளையும் எறிகணை செலுத்திகளையும் மற்றும் டாங்கிகளையும் சிறிலங்காவிற்கு விற்பனைசெய்ய முன்வந்துள்ளன.

# தெரிவுக்குழுவிலிருந்து சுதந்திரக்கட்சி வெளியேறும்

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி, ஆகிய மூன்று கட்சிகளும் விலகலாம் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெரிவுக் குழுவிலிருந்து கட்சிகள் சில விலகி வருவதால் தொடர்ந்து தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பதில் பயன்இல்லை என சுதந்திரக் கட்சியும் ஏனைய இரு கட்சிகளும் தெரிவித்துள்ளன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

பாராளுமன்ற தெரிவுக் குழுவின்

## இடைக்கால பரிந்துரை முஸ்லிம்காங்கிரஸ் நிராகரிப்பு

### தெரிவுக்குழுவிலிருந்து விலக யோசனை

இனப்பிரச்சினைக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்காலப் பரிந்துரைகளை சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் நிராகரித்துள்ளது.

கடந்த செவ்வாயன்று தமிழ்க் கட்சிகள் முஸ்லிம் காங்கிரஸின் இம் முடிவை வரவேற்றுள்ளன.

பெரும்பான்மையினர் கருத்துக்களை பாராளுமன்றத் தெரிவுக் குழு முஸ்லிம்கள் மீதும், தமிழர்கள் மீதும் திணிப்பதால் தாம் தெரிவுக் குழுவிலிருந்து விலகிக்கொள்ள யோசிப்பதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம் எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

செவ்வாயன்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம் அஷ்ரப் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், தமிழ் கட்சிகளை முஸ்லிம் காங்கிரஸ்சுடன் பேச்சு வார்த்தைகளை மீளவும் ஆரம்பிக்க அழைத்திருப்பதோடு, இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஒருமித்த யோசனையை தமிழ் - முஸ்லிம் தரப்பினர் முன்வைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அக்கரைப்பற்று வந்த

## ஜனாதிபதி திரும்பியதும் வேலைகளும் ஸதம்பிதம்

[கொழும்பு]

பெப்ரவரி 26ஆம் திகதி அன்று நள்ளிரவுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் 27ஆம் திகதியன்று சிறிலங்கா ஜனாதிபதி அக்கரைப்பற்றுவிற்கு விஜயம் மேற்கொண்டதன் பின்னர் ஸ்தம்பித நிலையை அடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

சிறிலங்கா ஜனாதிபதியின் விஜயத்தை முன்னிட்டு வீதி திருத்த வேலைகளும், மின் விநியோகத்தை சீராக்கும் வேலைகளும் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால் சிறிலங்கா ஜனாதிபதியின் விஜயம் பூர்த்தியானதை அடுத்து இவ் வேலைகளும் கைவிடப்பட்டுள்ளன.

இதனால் வீதியோரத்திலி

(4ஆம் பக்கம் பார்க்க)

# 10லட். அஞ்சல் அட்டை ஜனாதிபதிக்கு அனுப்பமுடிவு

## -எதிர்க்கட்சியின் புதிய போராட்டம்

வாழ்க்கைச் செலவினங்கள் உயர்வு மற்றும் பத்திரிகையாளர் துன்புறுத்தப் படுதல் ஆகியவற்றைக் கண்டித்துப் பத்து இலட்சம் அஞ்சல் அட்டைகளை ஜனாதிபதிக்கு அனுப்ப எதிர்க்கட்சிகள் கூட்டு முன்னணி தீர்மானித்துள்ளது. இந்த அஞ்சல் அட்டைப் போராட்டம் இந்த மாத முடிவுக்குள் ஆரம்பிக்கப்படும் என்று இப் போராட்டத்தின் அமைப்பாளர் மகிந்தா ராஜபக்ஷ தெரிவித்தார்.

முதலில் 50 000 அஞ்சல் அட்டைகள் அனுப்பப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். அரச கட்டுப்பாட்டில் உள்ள ரூபவாகினி மற்றும் ஐ. ரி.என்.ஒளிபரப்புச் சேவைகள் மூலம் எதிர்க்கட்சிகள் தமது கருத்தை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் தருமாறும் இந்த அஞ்சல் அட்டைகள் மூலம் தாம் ஜனாதிபதியைக் கேட்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## வீரச்சாவு



வீர வேங்கை
தென்னவன்
(சேகர்)

20 - 03 - 93 அன்று காலை சுகயீனம் காரணமாக விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். வீர வேங்கை தென்னவன் (சேகர்) மகாலிங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

[கொழும்பு]

இந்த நாட்டுக்கு எதிரானவர்களே வடக்கும் கிழக்கும் இணைக்கப்படவேண்டும் எனக் கோருகின்றனர். தமிழ் பிரிவினைவாதிகள் இதனை கோருகின்றனர். மக்கள் மத்தியில் செல்வாக்கில்லாத சிங்களவர்களாக பிறந்தசிலர் இதற்கு ஆதரவு அளிக்கின்றனர். இவ்வாறு திம்புலுகல்ல சங்கநாயக்க பிரதம சங்கநாயக்கர் வண. கித்தலகம நாயக்க தேரோ தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து கருத்து தெரிவித்த அவர் குறுகிய அரசியல் நலனுக்காக நாட்டின் ஒருமைப்பாட்டை எந்த ஓர் அரசியல்வாதியும் பேரம்பேச முடியாது என்றார்.

இணைப்பு குறித்து கருத்து தெரிவித்த மல்வத்தைப்பீட மகாநாயக்க தேரோ வண. ரம்புக்வெல்ல விபஸி தேரர், ''பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையின் மூலம் ஐ.தே.கவும், சுதந்திரக்கட்சியும் இணைப்பை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 80 பேர் மயக்கம்

கொழும்பிலிருந்து கடந்த வாரம் இரவு ரயிலில் வவுனியா வந்த பயணிகள் ரயிலில் தனியாரினால் விற்பனை செய்யப்பட்ட உணவுப் பண்டங்களை வாங்கி உண்டதனால் மயக்கமடைந்த நிலையில் வவுனியா வந்து சேர்ந்தனர்.

இவர்களில் 80 பேர் மயக்கமான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எஸ். ஜெகநாதன் (25), ஆர். உதயகுமார் (28) ஆகியோர் உட்பட மூவர் வயிற்றோட்டம், வாந்தியால் பெரிதும் பாதிக்கப் பட்டனர்.

## அன்னை பூபதி நினைவாக சிரமதான நிகழ்ச்சிகள்

(தென்மராட்சி)

தியாகதீபம் அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாட்கள் தென்மராட்சி பகுதியில் சகல இடங்களிலும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இல்லங்களுக்கு முன் மக்கள் வீடு அமைத்து சிவப்பு, மஞ்சள் கொடி பறக்க விட்டவாறும் இருக்கின்றனர். அவ்வீடுகளில் அன்னை பூபதியின் உருவப் படங்களும் வைக்கப்பட்டுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பனாகொடை இராணுவ முகாமில்

## காவற்கடமையில் இருந்தவர் துப்பாக்கியுடன் ஓட்டம்

பனாகொடை இராணுவ முகாமில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தனது துப்பாக்கி மற்றும் ரவைகளோடு தலைமறைவாகி விட்டதாகப் பொலீசார் கூறியுள்ளனர். இவரைத்தேடி மூன்றுபேரைக் கொண்ட பொலீஸ் குழுவொன்று அவரது சொந்தக் கிராமத்திற்கு சென்றிருப்பதாகவும் பொலீசார் மேலும் தெரிவித்தனர்

இதேவேளை அம்பாறை மாவட்டத்திலிருக்கும் பொறபொல விமானப்படை முகாமில் காவல் கடமையிலிருந்த விமானப்படையைச் சேர்ந்த ஒருவர் மிதிவெடியை மிதித்ததால் உயிரிழந்தார்.

# நாகர்கோவில் பகுதியில் கடற்படை அட்டகாசம்

(வடமராட்சி)

நாகர்கோவில் கடற்பகுதியில் ரோந்துசென்ற சிறிலங்கா கடற்படையினர் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் படகுகள் வலைகள் பலவற்றையும் சேதமாக்கியதோடு இரண்டு மீனவர்களை பலமாக தாக்கிய கடற்படையினர் மீனவர்களை கடலில் தூக்கி வீசியதாகவும் அறிய முடிகிறது,

கடற்படையினரின் இவ் அடாவடித்தனத்தால் சகோதரர்களான மீனவர்கள் இருவரும் ஒரு இரவுப் பொழுதையும் ஒரு பகல் பொழுதையும் கடலிலே கழிக்க வேண்டி ஏற்பட்டதாகவும் மேலும் அறிய முடிந்தது.

பலாலியைச் சேர்ந்த இவர்கள் நாகர்கோவில் பகுதியில் அகதிமுகாம்களில் இருந்து வந்ததாகவும். கடந்த புதன் கிழமை இரவு கடலுக்குச் சென்றதாகவும், கடலில் திடீரென எதிர்ப்பட்ட கடற்படையினர் இவர்களை சுற்றிவளைத்து தாக்கியதோடு மூலவளங்களை நாசப்படுத்தி விட்டதினால் இவர்கள் கரையை வந்துசேர முடியாமல் அவஸ்தைப்பட்டதோடு காற்று வீசும் பக்கமாக நீந்திச் சென்று 24 மணித்தியாலங்களில் கற்கோவளம் கரைப்பகுதியை வந்தடைந்ததாகச் சொல்லப்

(4 ஆம்பக்கம் பார்க்க)

## கல்முனை கடற்ரரப்பில் மீனவர் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கல்முனைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற் படையினர் தாக்குதல் நடாத்தியதுடன் மீனவர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மேற்படி கடற்பரப்பில் சிறு படகு ஒன்றில் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் திடீரென அப்பகுதிக்கு வந்த கடற்படையினரது பீரங்கிப் படகிலிருந்து மீனவர்களை நோக்கி ஒளி பாய்ச்சியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. மீன்பிடிப் படகில் இருந்த மூன்று மீனவர்களில் இருவர் தப்பிவந்துவிட்டனர். ஒருவரை கடற்படையினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் படையால் பொதுமகன் சுட்டுக்கொலை

திருக்கோணமலை மாவட்டம் சாம்பல்தீவு பாலத்தடியில் சிறிலங்கா இராணுவத்தினரால் பொதுமகன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

சாம்பல்தீவைச் சேர்ந்த இராசரட்ணம் (வயது 36)என்பவரே இவ்வாறு இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

## வரி விளம்பரம்

### சோதிடம்

வெளியூர் பயணம் செல்ல, ஜாதகம் எழுத விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க- வேலணை சோதிடர் V A. சிவராசா, 152 B, அரசடி றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம். (4540)

### சித்தஆயுர்வேத மருந்துகள் வருகை

பருத்தித்துறை பிரதேச சபை இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 15,000 ரூபாவுக்கு மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்பட்டு வந்து சேர்ந்துள்ளன. இவ் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையின் கிளைகள் கற்கோவளத்திலும், சக்கோட்டையிலும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இவ் ஆயுர்வேத வைத்தியசாலையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறை பிரதேசசபை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

### நூலக வாரம் பிரகடனம்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் கீழுள்ள நூலகம் பிரதேசசபைப் பிராந்தியத்தில் வசிக்கும் மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் பொது நூலகமாக விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

அத்துடன் இந் நூலகத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் நூல்கள் சேகரிக்கவும், நிதிசேகரிக்கவும், நூலகவாரம் ஒன்றையும் இச்சபை பிரகடனம் செய்துள்ளது. (86)

### புதிய சனசமூகநிலையம் ஆரம்பம்

தென் புலோலி கிராமத்தில் புதிய சனசமூக நிலையமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. திரு. வீ. கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இச்சனசமூக நிலைய ஆரம்ப வைபவத்தில் பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர்: திரு. ச. செவ்வந்திநாதர், உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி அதிகாரி செல்வி செ. கணேசன் சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் திரு சு. திருச்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்-

## சமூக அபிவிருத்திக் குழுக்கள் அமைப்புநடவடிக்கைதீவிரம்

யாழ். மாநகரசபைப் பகுதியினர் யாழ். மாநகரசபைக் குட்பட்ட வட்டாரங்களில் இவ் வாண்டுக்கான சமூக அபிவிருத்திக் குழுக்களை அமைக்கும் பணியை தற்போது துரித கதியில் முடுக்கிவிட்டுள்ளார்கள்.

இப் பகுதியில் அமைந்துள்ள சனசமூக நிலையங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சிக்கன கடனுதவி, கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மகளிர் அமைப்புக்கள், இளைஞர் சங்கங்கள் ஆகியவற்றில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிப்பவர்கள் இச் சமூக அமைப்புக் குழுக்களில் முக்கிய பங்கினை வகிக்க தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்

யாழ். மாநகரசபை சன சமூக நிலையங்களின் மேற்பார்வை உத்தியோகத்தர் வீடமைப்பு அதிகாரசபை உத்தியோகத்தர் ஆகியோர் தலைமையில் இச் சமூக அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கும் பணி தற்போது இடம்பெற்று வருகின்றது.

இச் சமூக அபிவிருத்திக் குழுக்களின் சிபார்சுடன் வறியோர்களுக்கான வீடமைப்பு நிவாரணக் கடன்கள் வழங்கப் பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)


16ஆம் நாள் நினைவஞ்சலியும்

**சபிண்டீகரண அழைப்பும்**

அமரர் உயர்திரு. அருணாசலம் சபாபதிப்பிள்ளை

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

எமது குடும்ப விளக்கு அமரர் திரு. அ. சபாபதிப்பிள்ளை அவர்களின் மரணச் செய்தி கேட்டு, ஓடோடி வந்து உதவி செய்த நண்பர்கள், உற்றவர்கள், உறவினர்கள் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு மலர் வளையம் சாத்தி அஞ்சலி செய்தோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் சபிண்டீகரணமும், ஆத்மசாந்திப்பிரார்த்தனைகளும் நாளை 23-03-1993 செவ்வாய்க்கிழமை, எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் அனைவரும் சமுகம் தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

குருக்கள் ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். - குடும்பத்தினர்
(4535)



உ

சீரணி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய

**வழிபடுவோர் சபை**

மேற்படி சபையின் பொதுக்கூட்டம் 07-03-1993 ஞாயிற்றுக்கிழமை தலைவர் திரு. அ. சதாசிவம் தலைமையில் நடைபெற்றதைத் தொடர்ந்து திரு. அ. சதாசிவம் தலைவராகவும், திரு. ச சிவகுமாரன் உப தலைவராகவும், திரு சி. நாகராசா செயலாளராகவும், திரு. த. கோவிந்தசாமி உபசெயலாளராகவும், திரு. நா. மகேஸ்வரன் தனாதிகாரியாகவும்- கொண்ட இருபத்தியொரு உறுப்பினர் (21) அடங்கிய நிர்வாகசபை தெரிவாகி செயற்பட்டு வருகின்றது என்பதை அம்பாளின் மெய்யடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

சண்டிலிப்பாய் சி. நாகராசா
21-03-1993 (4542) கௌரவ செயலாளர்


## 5-ம் ஆண்டு நினைவு தினம்



### மா இல்லை

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தோருக்கான இலவச நிவாரண விநியோகத்தில் பெப்ரவரி மாத கடைசி இரு வாரத்திற்கான உலர் உணவுப் பொருள்களில் மா வழங்கப்படமாட்டாது. பதினெட்டு ரூபா விலையிலான வெள்ளை நாட்டரிசி சீனி மைசூர்பருப்பு, சோப் என்பவற்றுடன் ஒன்றிற்கு மேற்பட்ட அங்கத்தவர்களையுடைய குடும்பங்களுக்கு ஒரு பால்மா பைக்கற் ஆகிய பொருள்கள் விநியோகிக்கப் படும். (22)

### மீளாய்வு செய்யப்படும்

குருநகர்ப் பகுதியில் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினரால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நோய்த் தடுப்பு சுகாதார வேலைகள் இன்று திங்கட்கிழமை பி.ப. 2.30 மணியளவில் இது தொடர்பான முன்னேற்றங்கள் பற்றி மீளாய்வு செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (17)

### மினிவான் கட்டணம் உயர்வு

[யாழ்ப்பாணம்]

தாளையடி - செம்பியன் பற்று ஆகிய இடங்களுக்குச் செல்லும் மினி தட்டிவான் கட்டணம் திடீரென உயர்ந்துள்ளது. இதுவரை 60 ரூபாவாக இருந்துவந்த கட்டணம் 100 ரூபாவாக அதிகரித்துள்ளதால் நாளாந்தம் பயணம் செய்யும் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## மேலும் இரு சடலங்கள் கிளாலி கரையில் ஒதுங்கின

(தென்மராட்சி)

கிளாலிக் கடற்கரையில் மேலும் ஓர் ஆணின் சடலம் கடந்த வெள்ளியன்று மாலை4 மணியளவில் கரை ஒதுங்கியுள்ளது. இதேவேளை நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் கச்சாய்கடலில்ஓர்ஆணின் சடலம் மிகவும் பழுதடைந்த நிலையில் கச்சாய் பகுதி மீனவர்கள் கடலில்போட்ட வலையில் தடக்குண்டு நின்று பின்பு மீனவர்கள் அச்சடலத்தைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தமை தெரிந்ததே.

கிளாலிக் கடற்கரையில் கடந்த வெள்ளியன்று கரைஒதுங்கிய இரண்டு சடலங்கள் இனம் காணமுடியாத நிலையில் தமிழீழ காவல்துறையினராலும், அப்பகுதி கிராம உத்தியோகத்தராலும் கரையிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த வெள்ளியன்று கரைஒதுங்கியஒரு சடலத்தை உறவினர்கள் வந்து அடையாளம்காட்டிக் கொண்டுசென்றதாக அறியப்படுகின்றது. கரைசேர்ந்த சடலங்கள் யாவும் இனம் காணப்பட முடியாதவாறு மிகவும் பழுதடைந்தநிலையில் காணப்பட்டன. இதேவேளை கேரதீவு 'முனங்கு' என்னும் கடல்முனையில் ஒரு சடலம் தடங்கிக் கிடப்பதாகப் படகோட்டிகள் எமது செய்தியாளருக்குத் தெரிவித்தனர்.

இதேவேளை கிளாலி நடுக்கடலில் ஒரு பாரிய பீரங்கிப் படகு இடைக்கிடை வந்து போவதாகப் படகோட்டிகள் கூறுகின்றனர். இரவில் இப் பீரங்கிப் படகுகளிலிருந்தே கரையோரங்களை நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப் படுவதாகத் தெரிய வருகின்றது (86)

### எறிகணை தாக்குதல்

(தொல்புரம்)

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் கடந்த வெள்ளி இரவு 8.15 மணியளவில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணை வீச்சினையும், துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து அதே தினம் இரவு 10 30 மணியளவில் மீண்டும் எறிகணை வீச்சினை நடாத்தினர் இத்தாக்குதலில் எவ்வித சேதமும் ஏற்படவில்லையெனத் தெரியவருகிறது. (41)

### வீரவணக்கக் கூட்டம்

மூன்றாம் மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களில் உடுவில் வட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களை நினைவு கூரும் வீரவணக்கக் கூட்டம் எதிர் வரும் 25ஆம் திகதி அன்று இரவு 8.00 மணிக்கு சங்குவேலி பிள்ளையார் கோயிலடியில் உடுவில் வட்டப் பொறுப்பாளர் கலையரசன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மூன்றாம் மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களுடைய நினைவஞ்சலிக் கூட்டம் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு தம்பலகாமம் பன்னிருவர் நினைவு தூபிக்கு அருகாமையில் பளை அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு அன்பு தலைமையில் நடைபெறும். [86]


**R M P தேவை**

வவுனியாவில் வெகு விரைவில் திறக்க இருக்கும் டிஸ்பென்சரிக்கு ஓர் ஓய்வு பெற்ற உதவி வைத்திய அதிகாரி (R. M. P.) தேவை. எதிர் பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும்.

**S நவரத்தினம்**
8, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (4541)


## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-22

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - அமிர்தகழிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது வீரச்சாவெய்திய-

சிந்து (தம்பிராசா லோகநாதன் - ஏறாவூர் - மட்டு. )

பரணி (சீவரட்ணம் டேவிற் அற்புதராஜன் - அமிர்தகழி - மட்டு. )

மட்டு - கல்லாறுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

சீலன் (ஆறுமுகம் வேதாரணியம் - முகாத்தான்குளம்- செட்டிகுளம் - வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

சஞ்சீவி (தங்கராசா நடராசா - கலகங்குளம், செட்டிகுளம் - வவுனியா)

1987ஆம் ஆண்டு கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

வினோத் (ஆறுமுகம் வீரசிங்கம் - வன்னேரிக்குளம் - கிளிநொச்சி)

வசந்தன் (இராமையா யோகராசா - இல, 49,

1991 ஆம் ஆண்டு மன்னார் சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்காப்படைமுகாம் தகர்ப்பின் நான்காம் நாள் நடைபெற்ற சமரில் வீரச்சாவெய்திய

பாலசுந்தரம் (முத்துபிள்ளை சிவலிங்கம்-விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை-மட்டு)

சந்திரகாந் (காளியப்பு ராஜி - தம்பலகமம்-திருமலை

கலாதரன் (விநாயகமூர்த்தி சிவனேஸ் - திருமலை)

உத்தமன் (பழனியாண்டி வேலு-தலவாக்கொல்லை)

ராவ் (தோமஸ் பத்திநாதன்-கற்பிட்டி-புத்தளம்)

லெப்.சங்கர் (-ரவிசங்கர்-குமுழமுனை-மணலாறு)

கப்டன் பாஸ்கர் (செபமாலை ரவீந்திரன்-பள்ளங்கோட்டை, நானாட்டான்-மன்னார்)

லெப்.சுகந்தன் (இம்மானுவல் பீற்றர் அழகுராஜா யோகேந்திரன்-நறுவிலிக்குளம் - வங்காலை-மன்னார்)

லெப் சுரேந்தர் (பொன்னுப்பிள்ளை பாலதாஸ்-பரிகாரிகண்டல், முருங்கன் - மன்னார்)

2ம்–லெப்.பஸ்ரி (பிரான்சிஸ் ஜேசுதாஸன்-வங்காலை -மன்னார்)

ராஜு (செல்லத்துரை குமாரசாமி சிவநாதன்-மன்னார்)

பரமசிவம் (கிருஷ்ணகோபால் வசந்தகுமார்-மட்டுவில் கிழக்கு, பூநகரி)

சேகரன் (தர்மலிங்கம் இம்மானுவேல் இராஜேஸ்வரன் -முழங்காவில்-மன்னார்)

இரத்தினம் (அந்தோனிப்பிள்ளை மரியநாயகம்- முருங்கன்பிட்டி, முருங்கன் -மன்னார்)

புதிய
சனசமூகநிலையம்
ஆரம்பம்

தென் புலோலி கிராமத்தில் புதிய சனசமூக நிலையமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. திரு. வீ. கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இச்சனசமூக நிலைய ஆரம்ப வைபவத்தில் பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர்: திரு. ச. செவ்வந்திநாதர், உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி அதிகாரி செல்வி செ. கணேசன் சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் திரு சு. திருச்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்-


UNIVERSITY OF JAFFNA
TENDER NOTICE

Tenders invited from Contractors registered for Civil Engineering Works with University of Jaffna or ICTAD for "Improvement to fence along Western Boundary a Sports Complex.

Tender forms can be obtained from Works Engineer University of Jaffna from 1993 - 03 - 22-1993-03-24 on producing receipt from Bursar, University of Jaffna for the payment of the following tender fees.

1) Refundable Rs. 1,500/-
2) Non - Refundable Rs. 200/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not letter than 10.00 a.m. on 1993 04 01.

Tender forms can be inspected free of charge at Planning Branch University of Jaffna during office hours.

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

REGISTRAR
University of Jaffna.
P O.Box 57
Thirunelvely,
Jaffna. (சி/6270)


சிரணி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய

## வழிபடுவோர் சபை

மேற்படி சபையின் பொதுக்கூட்டம் 07-03-1993 ஞாயிற்றுக்கிழமை தலைவர் திரு. அ. சதாசிவம் தலைமையில் நடைபெற்றதைத் தொடர்ந்து திரு. அ. சதாசிவம் தலைவராகவும், திரு. ச சிவகுமாரன் உப தலைவராகவும், திரு சி. நாகராசா செயலாளராகவும், திரு. த. கோவிந்தசாமி உபசெயலாளராகவும், திரு. நா. மகேஸ்வரன் தனாதிகாரியாகவும் கொண்ட இருபத்தியொரு உறுப்பினர் (21) அடங்கிய நிர்வாகசபை தெரிவாகி செயற்பட்டு வருகின்றது என்பதை அம்பாளின் மெய்யடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

சண்டிலிப்பாய்
21-03-1993 (4542)

சி. நாகராசா
கௌரவ செயலாளர்

## 5-ம் ஆண்டு நினைவு தினம்



### லெப்டினன்ட் மூஸ்தபா

[சிங்கராயர் மரியதாஸ்]

வீரப்பிறப்பு 16.12-1961 — வீரச்சாவு 22-03-1988

காட்டிக் கொடுத்தனர். உன் உயிர் அதன்பின் பறிக்கப்பட்டது
வெந்தணலில் பட்ட மெழுகுபோல் துடிக்கின்றோம்
உன் பிரிவுத்துயர் தாங்காது
எம்மை யெல்லாம் ஏங்கவைத்து விட்டுப்பிரிந்து
வருடம் ஐந்து ஆனது இன்று
ஆயினும் வருடங்கள் எத்தனைதான் உருண்டாலும்
உன் நினைவுகள் எம்மனதை விட்டகலா.

இவர் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்
உறவினர், நண்பர்கள்.

(சி/4543)

கழிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது வீரச்சாவெய்திய-

**சிந்து** (தம்பிராசா லோகநாதன் - ஏறாவூர் - மட்டு.)

**பரணி** (சீவரட்ணம் டேவிற் அற்புதராஜன் - அமிர்தகழி - மட்டு.)

மட்டு - கல்லாறுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**சீலன்** (ஆறுமுகம் வேதாரணியம் - முகாத்தான்குளம்-செட்டிகுளம் - வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**சஞ்சீவி** (தங்கராசா நடராசா - கலகங்குளம், செட்டிகுளம் - வவுனியா)

1987ஆம் ஆண்டு கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**வினோத்** (ஆறுமுகம் வீரசிங்கம் - வன்னேரிக்குளம் - கிளிநொச்சி)

**வசந்தன்** (இராமையா யோகராசா - இல, 49, கோணாவில் - கிளிநொச்சி)

இதே சம்பவத்தின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். சஞ்சீவி/மீசை** (செல்லப்பா கெங்காதரன் - 08-ம் கட்டை, தெல்லிப்பழை- யாழ்.)

வசாவிளானில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**றொபின்** கந்தையா நாகரத்தினம் - கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு - யாழ்.)

1988ஆம் ஆண்டு உடையார்கட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**லெப் துர்க்கா** (கமலாதேவி சச்சிதானந்தன்- புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

**லெப். மூஸ்தபா/சந்திரன்** (சிங்கராயர் மரியதாஸ்- ''சகாயபவனம்'', கோயில்குடியிருப்பு - சாவகச்சேரி)

கொறவப்பொத்தானையில் இந்தியப்படையினரால் பேருந்திலிருந்து இறக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 17 தமிழர்கள்.

முல்லைத்தீவு - தண்டுவான் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 தமிழர்கள்.

பம்பைமடுவில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1989ஆம் ஆண்டு வட்டமடுப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் சத்தியன்** (ஞானமுத்து சிவானந்தராசா- தாண்டியடி, திருக்கோயில்- அம்பாறை)

மட்டு - வாழைச்சேனைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதசக்திகள் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். மேகன்** (சீனித்தம்பி தயானந்தன் கல்குடா, வாழைச்சேனை-மட்டு.)

மணலாறு - அளம்பில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் கைலன்** (கதிரவேல் முத்துராசா - இத்திகண்டல், அடம்பன் - மன்னார்)

மணலாறு நாயாற்றுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். கிர்மாணி** (ஏகாம்பரம் உதயகுமார்- 129, கொழும்புத்துறைவீதி- யாழ்.)

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக்காய்ச்சல் நோயின் காரணமாக எமைப்பிரிந்த-

**திசைவீரன்/மந்திரி** (அருளய்யா அருணேஸ்வரன்- அல்வின் வீதி, காரைநகர்-யாழ்)

(காளியப்பு ராஜு - தம்பலகமம்-திருமலை

**கலாதரன்** (விநாயகமூர்த்தி சிவனேஸ் - திருமலை)

**உத்தமன்** (பழனியாண்டி வேலு-தலவாக்கொல்லை)

**ராவ்** (தோமஸ் பத்திநாதன்-கற்பிட்டி-புத்தளம்)

**லெப்.சங்கர்** (-ரவிசங்கர்-குமுழமுனை-மணலாறு)

**கப்டன் பாஸ்கர்** (செபமாலை ரவீந்திரன்-பள்ளங்கோட்டை, நானாட்டான்-மன்னார்)

**லெப்.சுகந்தன்** (இம்மானுவல் பீற்றர் அழகுராஜா யோகேந்திரன்-நறுவிலிக்குளம் - வங்காலை-மன்னார்)

**லெப் சுரேந்தர்** (பொன்னுப்பிள்ளை பாலதாஸ்-பரிகாரிகண்டல், முருங்கன் - மன்னார்)

**2ம்-லெப்.பஸ்ரி** (பிரான்சிஸ் ஜேசுதாஸன்-வங்காலை -மன்னார்)

**ராஜு** (செல்லத்துரை குமாரசாமி சிவநாதன்-மன்னார்)

**பரமசிவம்** (கிருஷ்ணகோபால் வசந்தகுமார்-மட்டுவில் கிழக்கு, பூநகரி)

**சேகரன்** (தர்மலிங்கம் இம்மானுவேல் இராஜேஸ்வரன் -முழங்காவில்-மன்னார்)

**இரத்தினம்** (அந்தோனிப்பிள்ளை மரியநாயகம்- முருங்கன்பிட்டி, முருங்கன்-மன்னார்)

**ஜெரோமி** (நடராசா சகாயராசா-சிறுநாவற்குளம் மன்னார்)

**ஜெய்லான்** (இரத்தினசிங்கம் மொறிஸ் நிமலன் -கிளாலி

**பீற்றர்** (தெய்வேந்திரன் தவராசா-அல்லிப்பளை-பளை)

**உசான்** (சந்தனம் தேவநாயகம்-பளை)

**லெப்.டெனிக்** [சுந்தர் குகதாசன்-மிருசுவில் வடக்கு-கொடிகாமம்]

**லெப். பரணி** [செல்லத்துரை தவராசா-கெற்பலி, மிருசுவில்]

**லெப்.றொபேட்** [குலநாதன் குலமோகன்-''உதயபதி'' அளவெட்டி தெற்கு-யாழ்]

**மதனன்** [முருகேசு கமலகாசன் - கச்சாய் வடக்கு-கொடிகாமம்]

**சூரியகுமார்** [கனகராசா லிங்கேஸ்வரன்-புத்தூர் மேற்கு புத்தூர்-யாழ்]

**மது** [இமானுவேல் சுரேஸ்-மணற்காடு-குடத்தனை]

**பப்பா** [இராசலிங்கம் பத்மலிங்கம்-மாகியப்பிட்டி சண்டிலிப்பாய்-யாழ்]

**மணிமுடி** [பாலசிங்கம் கிரிதரன்-டச்சுவீதி-அளவெட்டி யாழ்]

**கலைச்செல்வன்** [துரைசிங்கம் மணிவண்ணன்- சிவன்கோயிலடி, குணநாதன்வீதி, வட்டுக்கோட்டை- யாழ்]

ஆனையிறவு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**பிரதாப்** [அருணாசலம் மோகன்-குளத்தடி, நாயன்மார் வீதி-நாயன்மார்கட்டு-யாழ்]

1992 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ''ஒப்பரேசன்-கஜபார'' நடவடிக்கையின்போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின் போது யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய]

**கப்டன் பரஞ்சோதி** (சிவபாதசுந்தரம் அனுசீலன் -5-ம் வட்டாரம், திரியாய்- திருமலை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6238)

சிந்தனைக்கு

முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும் தடங்கல் ஏற்படுவதை இயற்கை [ஒருபோதும்] அனுமதிப்பது இல்லை.
— யொஹன் கேத்தெ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22 - 03 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## நாசகார சக்திகள் குறித்து விழிப்புணர்ச்சி தேவை

நாசகார வேலைக்கென வடக்கே கடத்தி வரப்பட்ட வெடிப்பொருள்களை விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். பெரும்பாலும் அப்பாவிப் பொதுமக்களை படுகொலை செய்வதற்குப் பயன்படுத்த இருந்த இவ்வெடிகுண்டை கண்டுபிடித்ததன்மூலம் பெரும் உயிரழிவிலிருந்தும், பொருளழிவிலிருந்தும் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையினர் பாதுகாத்துள்ளனர்.

இக்குண்டுத் தாக்குதல் முயற்சியானது சிறிலங்கா அரசாங்கமும் தமிழ்த் தேசவிரோத கும்பல்களும் இணைந்து தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் நாசகார வேலைகளின் ஒரு பகுதியாகும். இதேபோன்று கடந்த காலத்திலும், பல முயற்சிகளை சிறிலங்கா அரசுதேசவிரோதகும்பல்களின் துணையுடன் மேற்கொண்டிருந்தது. இதில் ஒன்றே கடந்த வருடம் ஏப்ரல் மாதம் கொம்படியில் அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலாகும். இதில் பத்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட வேளையில், 15 பேர் படுகாயமடைந்தனர். இதே வேளை, கடந்த ஒக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட நாசகார முயற்சி ஒன்று தேசப்பற்று மிக்க இருவரின் ஒத்துழைப்பால்முறியடிக்கப்பட்டது.

தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியாக வெற்றி கொள்ள முடியாத சிறிலங்கா அரசாங்கம், தேசவிரோதகும்பல்களின் உதவியுடன் நாசகார வேலைகளை நடாத்தி தமிழர் மத்தியில் பதற்றத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்த முற்படுகின்றது. இதன்மூலம் தேசியஇனவிடுதலைப் போராட்டத்தை தோற்கடித்து விடவும், சிறிலங்கா அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. சிறிலங்கா அரசாங்கத்தின் அப்பாவி மக்களைப் படுகொலை செய்யும் இவ்வாறான நடவடிக்கையானது கோழைத்தனமானதாகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் இச்சதி நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு ஏற்கனவே பல தடவை தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது. இதே வேளை உளவாளிகள் குறித்து புலமுறை எச்சரிக்

# கூட்டணி முறிவால் கவலையில்லை; அமைச்சர்கள் முயற்சிக்கு கண்டனம்

## தமிழ்நாடு காங்கிரஸ் தீர்மானம்

(சென்னை)

மத்திய அரசின் தூதுவர்களாக அமைச்சர்கள் சிலர், தமிழகம் வந்து கூட்டணி தொடரவேண்டும் என்பதற்காக பேச்சுவார்த்தை நடத்துவதை தமிழக காங்கிரஸ் கட்சி கண்டிக்கின்றது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அ. இ. அ. தி. மு. க. தன்னிச்சையாக கூட்டணியை முறித்துக்கொண்டது பற்றி காங்கிரஸ் கவலைப்படவில்லை என்றும், இந்தச் சவாலை ஏற்க தமிழக காங்கிரஸ் தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

தமிழ் நாடு காங்கிரஸிற்கு விடுக்கப்பட்ட இந்த சவாலை ஏற்று மிகுந்த துணிவோடு செயற்படப் போவதாக அக்கட்சி முடிவு செய்திருக்கிறது. தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சி நிருவாகிகள் மாவட்ட இந்திரா காங்கிரஸ் குழுத் தலைவர்கள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்திலேயே மேற்படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மேலும் சில தீர்மானங்கள் வருமாறு:

இந்திரா காங்கிரஸ் தலைவர் பி. வி. நரசிம்மராவ் கூட்டணி தொடரும் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்த போதும் அ. இ. அ. தி. மு. கழக பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கூட்டணியை எப்படியும் முறித்துக் கொள்வதென்று திட்டமிட்டு செயற்பட்டிருப்பதாக அது குற்றம் சாட்டியது. மத்திய அரசிற்கெதிராக அ. இ. அ. தி. மு. கழகம் தொடர் போராட்டம் நடாத்தியது, கூட்டணியை தொடரவேண்டாம் என்று முன்னமே அக்கட்சி தீர்மானித்திருந்ததற்கு அடையாளம் என்றும் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் குற்றம் சாட்டியது. பின்னர் செய்தியாளரிடையே பேசிய வாழப்பாடி ராமமூர்த்தி அன்றைய கூட்டத்தில் பங்கு கொண்ட அனைவரும் கூட்டணி பற்றிய இந்த தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றினார்கள்என்றார்தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியினரின் விருப்பத்தையும், கருத்துக்களையும் கட்சித் தலைமை மதிக்குமென்று எதிர்பார்ப்பதாக அவர் மேலும் கூறினார்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக கூட்டணி தொடர வேண்டும் என்பதற்காக கட்சித்தலைமையின் தூதர்கள் என்று தங்களைத் தாங்களே கூறிக் கொண்டு சில மத்திய அமைச்சர்கள் தமிழகம் வருவதை இன்றைய கூட்டம் கடுமையாக கண்டிக்கின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றுமோர் தீர்மானம் தமிழகம் முழுவதும் சட்ட ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதாகவும் ஆளும் கட்சியின் ஆதரவுடன் குற்றங்கள் தங்குதடையின்றி நடைபெறுவதாகவும் குற்றம் சாட்டியது.

மேலும் அ. தி. முகவின் ஏதேச்சதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டிப்பதோடு மாநில அரசின் ஆதரவோடு ஜனநாயக விரோத செயல்கள் நடைபெறுவதை அத் தீர்மானம் குறைகூறியுள்ளது.

## பழநி இடைத் தேர்தலில் காங்கிரஸ் தனித்துப் போட்டி

(சென்னை)

பழநி மக்களவைத் தொகுதிக்கான தேர்தலிலும், ராணிப்பேட்டை சட்டமன்றத் தேர்தலிலும் காங்கிரஸ் கட்சி போட்டியிடும் என்றுதமிழக சட்டப் பேரவைஎதிர்க்கட்சித்தலைவர் எ . ஆர். பாலசுப்பிரமணியம் நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்; காங்கிரஸ் கட்சியினர் சட்டப்பேரவையில் தமதுகருத்துக்களைச் சொல்ல பேரவைத்தலைவர் அனுமதிப்பது இல்லை என்றும், ஜனநாயக பூர்வமாக செயற்படவும் அனுமதி மறுக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

பீட்டர் அல்போன்ஸ் மீது மீண்டும் தாக்குதல் நடாத்தப்படலாம் என்று கருதப்படுவதாகவும், எனவே அவருக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பம்பாய் குண்டு வெடிப்பு பதின்மூன்று பேர் கைது

பம்பாய் குண்டுவெடிப்பு தொடர்பாக மேலும் இருவர் கைது செய்யப்பட்டிருப்பதைத் தொடர்ந்து கைதானோரின் எண்ணிக்கை பதின்மூன்றாக உயர்ந்துள்ளது. கடைசியாக கைதான இருவரும் மாகின் என்ற இடத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புசம்பவத்தோடு தொடர்புடையவர்கள் என்று பொலீசார் கூறுகின்றனர்.

இதே வேளை பம்பாய் குண்டுவெடிப்பு சம்பவங்களுக்குக் காரணமான குற்றவாளிகள் இனங்காணப்பட்டிருப்பதாகவும்,விரைவில் கைது செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட்கூறியுள்ளார்.

## யுத்தத்தை நிறுத்தக்கோரி

### பாகிஸ்தானிலும் குண்டு வெடிப்பு

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாநிலத்தில் லொறி ஒன்றிலிருந்து உணவுப்பொருள்கள் இறக்கிக் கொண்டிருந்தபோது குண்டு ஒன்று வெடித்தது. இந்தக் குண்டு வெடிப்பினால் மூவர் உயிர் இழந்தனர் என்றும் பதிநான்கு பேர் காயமடைந்தனர் என்றும் தெரியவருகின்றது.

### 200 பேர் கைது

நேற்று சென்னை வந்த பி. ஜே. பி. தலைவர் எல். கே. அத்வானிக்கு கறுப்புக் கொடிகாட்டமுயன்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய குடியரசுக் கட்சி ஆகியவற்றைச்சேர்ந்த சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

### சவுதிக்கு தப்பினர்

பம்பாய்குண்டு வெடிப்புகள் தொடர்பாக தேடப்பட்டு வந்த முக்கிய இரு முஸ்லிம் சந்தேகநபர்களும் தற்போது சவுதிஅரேபியா ஜெட்டா நக

## அன்னை இவள்

அன்னை இவள்
'தமிழீழம்' பெற்ற
அன்னை இவள்
''அன்னை பூபதி''

மண்ணை இவள்
ஈழமண்ணை இவள்
நேசித்ததால்
ஊனை இவள்
உருக்கிக் கொண்டாள்.
உண்ணாமல் ஊனை இவள்
உருக்கிக் கொண்டாள்.

தன்னை இவள்
தன்னுயிரை இவள்
மண்ணை இவள்
உயிர்க்க வைக்கவே
தன்னை இவள்
தன்னுயிரை இவள்
தந்து போனாள்.

ஈழமண்ணிற்கு
இவள் கண் ஆனாள்
ஓ! ஈழமண்ணில்
எதிரிக்கு
சிவனின் நெற்றிக்கண் ஆனாள்.

அன்னை இவள்
'தமிழீழம்' பெற்ற
அன்னை இவள்
''அன்னை பூபதி''

மீன்பாடும் தேன் நாட்டில்
பண் இசைக்கும் எம் மண்ணில்
அன்பொழுக ..
சூரியனாய் உதித்தவள்
இன்று நிலவாய் வாழ்கிறாள்.

அன்றைய வீரத்தாய்
களத்திற்கு
மகனை அனுப்பினாள்.
'வீரன்' என கேட்க காத்திருந்தாள்.
எங்களது வீரத்தாய்
களத்திற்கு
மகனை அனுப்பினாள்.
'தமிழன்' என்றதால்
'வீரன்' தான் என ஊகித்துக்
கொண்டாள்.
தானும் போனாள்
நீதிக்காக போராடினாள்.
உணவைத் துறந்து
உடலை வருத்தி ..
விண்ணோரும் கதிகலங்க
போராடினாள்.
ஈற்றில்
தமிழர் பரம்பரை
'வீரப்பரம்பரை'யென பொதித்து
தன் கண் மூடினாள். கண் மூடினாள்.

அன்னை இவள்
''தமிழீழம்'' பெற்ற
அன்னை இவள்
'அன்னை பூபதி'.

- சுஜோ -

## பற்றிக்ஸ் - யாழ். கல்லூரி

வேளை, கடந்த ஒக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட நாசகார முயற்சி ஒன்று தேசப்பற்று மிக்க இருவரின் ஒத்துழைப்பால்முறியடிக்கப்பட்டது.

தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியாக வெற்றி கொள்ள முடியாத சிறிலங்கா அரசாங்கம், தேசவிரோதகும்பல்களின் உதவியுடன் நாசகார வேலைகளை நடாத்தி தமிழர் மத்தியில் பதற்றத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்த முற்படுகின்றது. இதன்மூலம் தேசியஇனவிடுதலைப் போராட்டத்தை தோற்கடித்து விடவும், சிறிலங்கா அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. சிறிலங்கா அரசாங்கத்தின் அப்பாவி மக்களைப் படுகொலை செய்யும் இவ்வாறான நடவடிக்கையானது கோழைத்தனமானதாகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் இச்சதி நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு ஏற்கனவே பல தடவை தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது. இதே வேளை உளவாளிகள் குறித்து பலமுறை எச்சரித்திருந்ததோடு, மக்களுக்கு உளவாளிகள் குறித்து விழிப்பைப ஏற்படுத்தும் வகையில் பத்திரிகைகள் ஊடாகவும், விளம்பரப்பலகைகள் ஊடாகவும் எச்சரிக்கையையும் அறிவுறுத்தல்களையும் வெளியிட்டுவந்துள்ளது.

இதேவேளை, புலனாய்வுப் பிரிவினர் எவ்வளவு விழிப்பாக இருக்கின்ற போதும், சில விடயங்கள் எதிர்பாராத ரீதியில் ஏற்பட்டுவிடுவதுமுண்டு, இதற்குத் தனியாக புலனாய்வுப் பிரிவினர் மட்டும் பொறுப்பாக இருந்துவிட முடியாது. ஏனெனில், நாசகார சக்திகள் குறித்த சில தகவல்கள் புல்னாய்வுப் பிரிவிற்குக் கிடைக்கப் பெற்றாலும், அது குறித்து மேலதிக தகவல்கள் பெறவும் அது குறித்து விசாரணைகளைத் துரிதப்படுத்தவும் மக்களின் விரைவான ஒத்துழைப்பு மிகமிக அவசியமாகும். அப்பொழுதே நாசகார சக்திகளின் நடவடிக்கைகளை முளையிலேயே கிள்ளிவிட முடியும்.

போர் முனையில் எதிரியைக் கண்டு கொள்வது ஒரு கஷ்டமான காரியமாகஇருக்காது. ஆனால் எமக்குள்ளேயே ஊடுருவியுள்ள நாசகார சக்திகளை அடையாளம் காண்பதென்பது மிகவும் கஷ்டமான காரியமாகும். அதுவும் தமது இனத்திற்கே கோடரிக்காம்புகளாக மாறிவிட்டவர்கள் இருக்கும் வேளையில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டியது மிக மிக அவசியம். ஏனெனில், அவர்களை இனங்கண்டு கொள்வதென்பது இருட்டினுள் கறுப்புப் பூனையைத்தேடுவது போன்றதொரு கடினமான காரியமாகும்.

இந்நிலையில் தமிழ் மக்களிடம் மீண்டும் மீண்டும் வற்புறுத்தக்கூடியது இதுதான். உளவாளிகள் குறித்தும், நாசகாரர்கள் மீதும் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதையே ஆகும். இது தனியாக விடுதலைப்புலிகளுக்கோ அன்றி அதன் புலனாய்வுத் துறையினருக்கோ என ஒதுக்கப்பட்டதொன்றல்ல. அத்தோடு அவர்களுக்கு எதிரான நடவடிக்கையும் மட்டுமல்ல.

இது தமிழ் மக்களுக்கு எதிரானது. அதே வேளை, ஒரு தனிநபருக்கோ அன்றி ஒரு குடும்பத்திற்கோ மட்டும் எதிரானதும் அல்ல; முழுத் தமிழ்ச்சமுதாயத்திற்கும் எதிரானது. ஆகையினால், மக்கள் தம்மைத் தாமே காத்துக்கொள்ள முன்வருவதோடு, தனது சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள முன்வர வேண்டும். இதற்கான ஒத்துழைப்பை விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையினருக்கு வழங்க வேண்டும்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்; காங்கிரஸ் கட்சியினர் சட்டப்பேரவையில் தப்படலாம் என்று கருதப்படுவதாகவும், எனவே அவருக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பம்பாய் குண்டு வெடிப்பு பதின்மூன்று பேர் கைது

பம்பாய் குண்டுவெடிப்பு தொடர்பாக மேலும் இருவர் கைது செய்யப்பட்டிருப்பதைத் தொடர்ந்து கைதானோரின் எண்ணிக்கை பதின்மூன்றாக உயர்ந்துள்ளது. கடைசியாக கைதான இருவரும் மாகின் என்ற இடத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புசம்பவத்தோடு தொடர்புடையவர்கள் என்று பொலீசார் கூறுகின்றனர்.

இதே வேளை பம்பாய் குண்டுவெடிப்பு சம்பவங்களுக்குக் காரணமான குற்றவாளிகள் இனங்காணப்பட்டிருப்பதாகவும், விரைவில் கைது செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் கூறியுள்ளார்.

## யுத்தத்தை நிறுத்தக்கோரி ஐ. நாவுக்கு மகஜர்

(பாரிஸ்)

வடக்கு, கிழக்கில் தமிழ்மக்களுக்கெதிராக சிறிலங்கா அரசினால் நடாத்தப்படும் இனவாத யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறுகோரி பாரிஸைத் தலைமையாகக் கொண்டியங்கும் மனிதஉரிமைமீறல்தொடர்பான மாணவ அமைப்புஒன்று மகஜர்ஒன்றைத் தயாரித்துவருகின்றது.

இதில் ஜேர்மன், பிரிட்டன், அவுஸ்ரேலியா, ஆசிய நாடுகள், ஜப்பான், அமெரிக்கா, கனடா ஆகிய நாட்டுமக்களிடம் கையொப்பம் பெறப்படுவதாக இந்த அமைப்புத் தெரிவிக்கின்றது.

இம்மகஜரைத் தாம் ஐ. நா மனித உரிமைக்குழுவிடம் ஒப்படைக்கப்போவதாக இந்த அமைப்பின் செயலாளர் கிரோம் பெர்னான்டோ தெரிவித்தார்.

## லண்டனில் குண்டுவெடிப்பு இருவர்பலி இருபதுபேர்காயம்

(லண்டன்)

பிரிட்டனில் நேற்று முன் தினம்இரண்டு குண்டுகள்வெடித்தமையால் இருவர் கொல்லப்பட்டதுடன் இருபது பேர் பலத்த காயமடைந்துள்ளனர். நெரிசல் மிகுந்த லொறிங்டன் சதுக்கப்பகுதியில் நடந்த இக் குண்டுவெடிப்புக்கு ஐரிஷ் குடியரசு இராணுவத்தினரே பொறுப்பாளிகளாக இருக்கலாம் என்று லண்டன் பொலீசார் கூறியுள்ளனர்.

பேர் காயமடைந்தனர் என்றும் தெரியவருகின்றது.

### 200 பேர் கைது

நேற்று சென்னை வந்த பி. ஜே. பி. தலைவர் எல். கே. அத்வானிக்கு கறுப்புக் கொடிகாட்டமுயன்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய குடியரசுக் கட்சி ஆகியவற்றைச்சேர்ந்த சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

### சவுதிக்கு தப்பினர்

பம்பாய்குண்டு வெடிப்புகள் தொடர்பாக தேடப்பட்டு வந்த முக்கிய இரு முஸ்லிம் சந்தேகநபர்களும் தற்போது சவுதிஅரேபியா ஜெட்டா நகருக்கு தப்பிச் சென்று விட்ட தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் டுபாயிலிருந்து கடந்த புதன் சவுதி அரேபியாவிற்கு தப்பிச் சென்றனர் என்றும், 5 நாட்கள்டுபாயில்இவர்கள் தங்கியிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

### 4 லட்சம் கால்நடை அழிந்தன

சீனாவில் நேற்று வீசிய கடும் பனிப் புயலினால் 15 பொதுமக்கள் பலியாகினர் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்மேற்கு சீனமாகாணமான குவின்காய் பகுதியில் வீசிய இப்புயலினால் சுமார் 4 லட்சம் கால்நடைகளும் அழிந்தன

நீதிக்காக போராடினாள்.
உணவைத் துறந்து
உடலை வருத்தி..
விண்ணோரும் கதிகலங்க
போராடினாள்.
ஈற்றில்
தமிழர் பரம்பரை
'வீரப்பரம்பரை'யென பொதித்து
தன் கண் மூடினாள். கண் மூடினாள்.

அன்னை இவள்
''தமிழீழம்'' பெற்ற
அன்னை இவள்
'அன்னை பூபதி'.

- சுஜோ -

## பற்றிக்ஸ் - யாழ். கல்லூரி வெற்றிதோல்வி இல்லை

(யாழ்ப்பாணம்)

சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 76-வது மாபெரும் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் 18-ம் திகதி வியாழக்கிழமையும், 19-ம் திகதி வெள்ளிக்கிழமையும் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 221 ஓட்டங்களைப் பெற்றது. பீற்றர் 54 ஓட்டங்களைப் பெற்றார். மகேந்திரராஜா சென்பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசி 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். சென்பற்றிக்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 122 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது இன்னிங்சில் யாழ்ப்பாணக் கல்லூரி 98 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுள்ளது சென்பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய பாலகுமார் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

சென்பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 123 ஓட்டங்களை பெற்றது. இதில் எரிக் 54 ஓட்டங்களைப் பெற்றார். [42]

### விளையாட்டு

யா/கொழும்புத்துறை துரையப்பாவித்தியாலயத்திற்குஅருகாமையுள்ள விளையாட்டரங்கில் இன்று பி. ப. 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. க. தங்கராஜா அவர்கள் தலைமையில் இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெறும். பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் யாழ் கோட்டம் திரு. சி. வேலாயுதம் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக திரு. த. அருணகிரிராஜா உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) அவர்களும் திருமதி பி.எவ். சின்னத்துரை யாழ் தெற்கு கொத்தணி அதிபர் அவர்களும் கலந்து கொள்வார்கள்.

❋

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் சின்னத்தம்பி டாஸ் தலைமையில் நடைபெறும். இவ்வைபவத்திற்கு உதவிக் கல்விப்பணிப்பாளர், பண்டத்தரிப்புக் கோட்டம் திரு. அருளானந்தம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

❋

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 11-ஆம் திகதி வியாழக்கிழமை திருமதி தி நாகராஜா (அதிபர், கொத்தணி அதிபர் வண்ணார்பண்ணை) தலைமையின் கீழ் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக திருமதி கமலா சிவசிதம்பரம் (சமூக சேவைப் பணிப்பாளர்) பரிசில்களை வழங்கினார்.

### விநாயகர் பிரதிஷ்டை

[தென்மராட்சி]

நுணாவில் கிழக்கு அருள்மிகு முருகன் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எழுந்தருளி விநாயகர் பிரதிஷ்டை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. அதற்கான பூர்வாங்க கிரியைகள் எதிர்வரும் வியாழன் காலை ஆரம்பமாகின்றது.

# ரஷ்யாவின் சிறப்பு ஆட்சி அதிபர் யெல்ட்சின் அறிவிப்பு

ரஷ்யாவில் அரசியல் சீர்திருத்தங்களின் எதிர்காலம் பற்றித் தீர்மானிப்பதற்கான கருத்துக்கணிப்பு ஏப்ரல் 25-ம்திகதிஇடம்பெறும் வரையில் அந்நாட்டில் சிறப்பு ஆட்சி ஒன்றைஅதிபர் பொரிஸ் யெல்ட்சின்பிறப்பித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு தொலைக்காட்சி மூலம் மக்களுக்கு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், அதிபர் மற்றும் துணைஅதிபர் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு, அரசியல் சாசனவரைவு மீதான வாக்கெடுப்பு, நிலங்களை தனியார் உடைமையாக்கல்என்பன பற்றி மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பாக இது இருக்கும் என்று தெரிவித்தார்.

அத்துடன் மக்கள் காங்கிரஸ், சுப்றீம் சோவியத் போன்ற மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் கலைக்கப்படவில்லை என்றும் ஆனால் அவை அதிபரின் ஆணையை மீறி முடிவெடுக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

இந்தக் கருத்துக் கணிப்பில் ஆயுதப்படையினர் நடுநிலை பேண வேண்டும் என்பதுடன் எல்லாவித அடிப்படை மனித உரிமைகளையும் மதித்து நடக்க வேண்டும் என்பதை பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதிபர் யெல்ட்சின் இந்த அறிவிப்பை, எதிர்ப்பதாக துணை அதிபர் அலெக்சாண்டர் யெக்ஸ்ரோவ், அரசியல் சாசன நீதிமன்றத் தலைவர் வாலரியும் அறிவித்துள்ளனர்.

எனினும் அமெரிக்காவும் பிரிட்டனும் அதிபர் யெல்ட்சினுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

ஈழநாதம்

# மன்னார் மாவட்டத்தில் மாவீரர் அஞ்சலி நிகழ்வு

1985 தொடக்கம் இதுவரை காலமும் பங்குனி மாதத்தில் வீரச்சாவடைந்த மன்னார் மாவட்ட மாவீரர்களை நினைவு கூருமுகமாக கடந்த வெள்ளியன்று கற்கடந்தகுளம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு நிகழ்ச்சிகளும், நினைவு கூரல் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

காலை 7 மணிக்கு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு கணேஸ் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து விளையாட்டுக்களை ஆரம்பித்து வைத்தார். சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து மாலை 7.30 மணியளவில் அனைத்து மக்களும் கற்கடந்த குளம் வீதியில் இருந்து மைதானத்தில் அமைக்கப்பட்ட கலையரங்குவரை அணிவகுத்து நிற்க முருங்கன் பாடசாலை மாணவியரின் பான்ட் வாத்திய இசையுடன் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் மாவீரர்களின் பெற்றோர்கள் மைதானத்திற்குள் அழைத்துவரப்பட்டனர்.

பின்னர் மாவட்டத் தளபதி திரு. அமுதன் அவர்கள் மங்கள விளக்கை ஏற்றி வைக்க மாவீரர்களின் பெற்றோர்கள் மாவீரர்களின் படங்களுக்கு சுடரை ஏற்றி மலர் அஞ்சலி செய்தனர்.

தொடர்ந்து நினைவுக் கூட்டம் ஆரம்பமானது. நானாட்டான் பிரதேசப் பொறுப்பாளர் திரு. திலகன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கோ. கணேஸ் அவர்களின் உரையில் இந்த நாள் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். 1991 ஆம் ஆண்டு இதே நாளில் சிலாவத்துறை இராணுவமுகாம்தாக்குதலில்முப்படைத் தாக்குதல்களுக்கும் ஈடு கொடுத்த பல போராளிகளிகளை இழந்தநாள் எனவும் ஒவ்வொரு போராளிகளினதும் மன உணர்வுகளையும் விரிவாக எடுத்துக் கூறினார்.

மேலும் இந்நிகழ்வில் மாவட்ட தளபதி திரு. அமுதன், மகளிர் அமைப்பு சார்பில் செல்வி சுதர்மினா. நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு. பத்திநாதன், முருங்கன் பங்குத்தந்தை இராயப்பு ஆகியோரும் உரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசளிப்பு வைபவம் இடம் பெற்றது. தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## நூல் வெளியீடு

(குருநகர்)

யாழ். பிரதான வீதி திருமறைக் கலாமன்ற கேட்போர் கூட்டத்தில் இன்று மாலை 5.00 மணிக்கு விவிலிய நாடக நூல் வரிசையில் காலையும், மாலையும்'' ''மண்ணே சாட்சி'', ''பலிக் களம்'' ஆகிய நூல்களின்வெளியீட்டு விழா மன்ற இயக்குநர் போராசிரியர் நீ. மரிய சேவியர் அடிகளார் தலைமையில் நடைபெறும்.

# அயோத்தியிலிருந்தது மசூதியே அல்ல

## - அத்வானி கருத்து

அயோத்தி பாபர் மசூதி இடிக்கப்பட்டமை பாரதூரமானதல்ல என பாரதீய ஜனதா கட்சித் தலைவர் எல். கே அத்வானி நேற்று தெரிவித்தார். சென்னை வந்த அவர் செய்தியாளர்களிடையே பேசும்போது, அயோத்தியில் இருந்தது மசூதி கட்டடமேயன்றி மசூதி அல்ல என்று குறிப்பிட்டார்.

பாரதீய ஜனதா கட்சியுடனான அ.தி.மு.க உறவு பற்றி குறிப்பிட்ட அவர், இரு கட்சிகளிடையேயும் இப்போது நல்லெண்ணம் உள்ளது எனக்கூறினார். புதுடில்லி தேசிய ஒருமைப்பாட்டு கூட்டத்தில் பாரதீய ஜனதாவுக்கு ஆதரவாக ஜெயலலிதா மட்டுமே பேசினார் எனவும் அத்வானி தெரிவித்தார்.

காங்கிரஸ் உடனான கூட்டணியை அ.தி.மு.க முறித்துகொண்டமை பாரதீய ஜனதாவிற்கு சாதகமாக இருக்கும். செல்வி ஜெயலலிதா 3 மாதங்களுக்கு முன் தம்மை சந்தித்தபோது காங்கிரஸ் - அ.தி.மு.க உறவு முறியக்கூடிய வாய்ப்புகளை தாம் அறிந்ததாகவும் அத்வானி மேலும் தெரிவித்தார்.

## பா. ஜனதா மாநாடு சென்னையில் பாதுகாப்பு

(சென்னை)

நேற்று மாலை சென்னை மெரீனா கடற்கரையில் நடைபெற்ற பாரதீய ஜனதா கட்சியின் பொதுக்கூட்டத்தை முன்னிட்டு சென்னை மாநகர் முழுவதும் பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மத்தியரிசேர்வ் பொலீஸ் படையும் சேவையிலீடுபட்டிருந்தது.

## அ.தி.மு.க- பா. ஜனதா கூட்டுசேர்வதில்என்ன தவறு

### –அமைச்சர் அரங்கநாயகம் கேள்வி

காங்கிரசுடனான உறவை அ.தி.மு.க முறித்துகொண்டிருக்காவிட்டாலும் காங்கிரஸ் இப்போதைக்குள் கூட்டணியை முறித்துக்கொண்டிருக்கும் என தமிழக கல்வி அமைச்சர் சி. அரங்கநாயகம் தெரிவித்துள்ளார்.

மற்றக் கட்சிகள் சிறுபான்மை கட்சிகளுடன் கூட்டு சேரும்போது அ.தி.மு.க. பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டு சேர்வதில் என்ன தவறு என்றும் அவர் மதுரையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் வினா எழுப்பினார்.

## காலம்கடந்தகாசுக்கட்டளை மாற்றிக் கொள்ள சந்தர்ப்பம்

(கொழும்பு)

காலம் கடந்து செல்லாது போன காசுக்கட்டளைகளை மாற்றிப் பணமாக்குவதற்கு இம்மாதம் 31 ஆம் திகதி வரை காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி 1, 1993 வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல் ஒன்றின்படி டிசம்பர் 31, 1987 க்கு முன் வழங்கப்பட்ட காசுக்கட்டளைகள் மாற்றப்படாது இருந்தால், அவற்றை ஜனவரி 31, 1993 க்கு முன் மாற்றும்படி கேட்கப்பட்டிருந்தது. இந்தக் காலக்கெடு இப்போது மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## சிற்றுண்டிச் சாலையில் சிகரெட் விற்கத் தடை

### மாணவர் ஒழுங்கை பேண நடவடிக்கை

(கொழும்பு)

★ பாடசாலைச் சிற்றுண்டிச் சாலைகளில் சிகரெட் விறகக் கூடாது

★ மாணவர்கள் ஆசிரியர்களுக்கு சிகரெட் வாங்கிக் கொடுக்கக் கூடாது.

★ ஆசிரியர்கள் பாடசாலைக் கட்டடத்தில் அல்லது பாடசாலை வளாகத்தில் புகைபிடிக்கக் கூடாது.

மேற்கூறிய மூன்று அறிவுறுத்தல்களையும் உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. பாடசாலை மாணவர்கள் புகைபிடிப்பதைத் தவிர்க்கவே இந்த நடவடிக்கை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டாக்டர்கள் அணிவது போன்ற

## மேலங்கி அணியும் தாதிகள் மீது கண்டனம்

(கொழும்பு)

சீருடைக்குப் பதிலாக டாக்டர்கள் அணிவதைப் போன்ற மேலங்கிகளைப் போடும் தாதிகளுக்கு எதிராகப் பல் வைத்தியர்கள் கண்டனக் குரல் எழுப்பியுள்ளார்கள்.

தெற்கில் பல் ஆஸ்பத்திரிகளில் கடமையில் உள்ள தாதிகள் மேலங்கிகளை அணிந்து கொண்டு கடமையில் ஈடுபடுவதால் தாதிக்கும் டாக்டருக்கும் வித்தியாசம் காணமுடியவில்லை என்று அஸ்பத்திரி சேவைகள் பணிப்பாளர் அதற்கான காரணத்தைக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீருடைக்குப் பதிலாக மேலங்கிகளை அணியும் தாதிகளிடம் அதற்குரிய காரணத்தை அறியுமாறு அனைத்து சுகாதார சேவைகள் பணிப்பாளர்களையும் சுகாதார திணைக்களம் பணித்துள்ளது.

## நேற்று வந்தனர்

(வடமராட்சி)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகைதர இருந்த ஐக்கிய இராட்சிய சிறுவர் பராமரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த யாழ். வதிவிட பிரதிநிதிகள் நேற்று 'வாதுவ, கப்பல் மூலம் வந்து சேர்ந்தனர்.

(யோ)

## தற்கொலை

[தென்மராட்சி]

குடும்பத் தகராறு காரணமாக மலத்தியோன் குடித்தவர் மரணமான சம்பவம் ஒன்று பளைப் பகுதியில் இடம் பெற்றது.

நேற்று பளைப்பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயாரான தி. சிவபூரணம் (வயது 36) என்பவர் மலத்தியோன் பவுடரைக் கரைத்துக் குடித்ததனால் இவரை உடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வரும் போது இடைவழியிலேயே மரணமானார்.

[86]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 21-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8731

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43 4004, 41-8036, 40-2394 26 0560. 26-6075,
27-6583, 24-6336, 24-5041, 42-2432, 40-1516,
24-4726, 27-9305, 26-5962. 42-9325, 26-1285,
24-5258, 41-8875, 37-7484

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1785, 26-3068, 24-5140, 42-3239, 27 4673
42-2364. 27-6769 27-2761, 27-9775, 28-1020
28-9327. 24-5718. 26-5814, 24 6475, 42-4126
28-3029, 26-3518, 24-4103

## தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடம்

### மொழி பெயர்ப்பாளர்கள் தமிழ் ஆங்கிலம்

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கும் அனுபவம் வாய்ந்த மொழி பெயர்ப்பாளர்கள் தங்களது அனுபவ அத்தாட்சிப்பத்திரங்களுடன் 25-03-93 வரை பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல் துறை அலுவலகத்திற்கு சமுகந்தரவும். தபால்மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

(சி/6242)

## 2-ம் வருட நினைவலைகள்!



மலர்வு 22

உதிர்வு 04

## 2000லிகிதர் வெற்றிடம்

## மாற்றிக் கொள்ள சந்தர்ப்பம்

(கொழும்பு)

காலம் கடந்து செல்லாது போன காசுக்கட்டளைகளை மாற்றிப் பணமாக்குவதற்கு இம் மாதம் 31 ஆம் திகதி வரை காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி 1, 1993 வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல் ஒன்றின் படி டிசம்பர் 31, 1987 க்கு முன் வழங்கப்பட்ட காசுக் கட்டளைகள் மாற்றப்படாது இருந்தால், அவற்றை ஜனவரி 31, 1993 க்கு முன் மாற்றும்படி கேட்கப்பட்டிருந்தது. இந்தக் காலக்கெடு இப்போது மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

---

## 2-ம் வருட நினைவலைகள்!



மலர்வு 22 – 05 – 1976

உதிர்வு 04 – 04 – 1991

செல்வி இராசையா மாலினி

[10-ஆம் ஆண்டு மாணவி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்]

திதி: 22 – 03 – 93

இருபத்திநான்கு மாதங்கள் சென்றாலும் உன்முகமும்
கருணையும் எம் எல்லோர் உள்ளங்களிலிருந்தும்
அகலவில்லையே! மாலினி!! என நித்தமும்
கண்முன் தோன்றுகின்றாயே!

உன்பிரிவால் வாடும்

குடமியன்
வரணி.

[4546]

பெற்றார்,
உறவினர்கள்.

---

## மரண அறிவித்தல்

## அன்னம்மா இரத்தினம்

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னம்மா இரத்தினம் இளைப்பாறிய ஆசிரியை 21-3-1993 நேற்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் நாகநாதர் இரத்தினம் (உதயன், ஈழநாடு, ஈழநாதம் பத்திரிகைகளின் முகவர் கோப்பாய்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி நளாயினி துரைராசா, திருமதி சிறிகாந்தி கதிரவேலு, மனோகரன் (மனோலைட்) பிரபாகரன், சுவேந்தினி, ஆகியோரின் அன்புத்தாயாரும், துரைராசா, கதிரவேல், அருள்மொழி, வசந்தராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ரஜினி, காந்தரூபன் (சிங்கப்பூர்), பிரியதர்சன், பிரியதர்சினி, பிரபாசினி, அனுசினா, சாறுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22-3-1993) திங்கள் பி.ப. 2மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக) நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோப்பாய் பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
நா. இரத்தினம் (கணவர்)
இ. மனோகரன் (மனோலைட்)

கோப்பாய்

(4544)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

க்கக் கூடாது.

★ ஆசிரியர்கள் பாடசாலைக் கட்டடத்தில் அல்லது பாட

டாக்டர்கள் அணிவது போன்ற

## மேலங்கி அணியும் தாதிகள் மீது கண்டனம்

(கொழும்பு)

சீருடைக்குப் பதிலாக டாக்டர்கள் அணிவதைப் போன்ற மேலங்கிகளைப் போடும் தாதிகளுக்கு எதிராகப் பல் வைத்தியர்கள் கண்டனக் குரல் எழுப்பியுள்ளார்கள்.

தெற்கில் பல் ஆஸ்பத்திரிகளில் கடமையில் உள்ள தாதிகள் மேலங்கிகளை அணிந்து கொண்டு கடமையில் ஈடுபடுவதால் தாதிக்கும் டாக்டருக்கும் வித்தியாசம் காணமுடியவில்லை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனைப் பல் வைத்தியர்கள் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். தாபனக் கோவை விதிகளுக்கு எதிராக மேலங்கிகளை அணிந்த தாதிகளிடம் குருநாகல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அதற்கான காரணத்தைக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீருடைக்குப் பதிலாக மேலங்கிகளை அணியும் தாதிகளிடம் அதற்குரிய காரணத்தை அறியுமாறு அனைத்து சுகாதார சேவைகள் பணிப்பாளர்களையும் சுகாதார திணைக்களம் பணித்துள்ளது.

---

### தெரிவுக்

தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையைத் தொடர்ந்து குழுவிலிருந்து 7 தமிழ்க் கட்சிகளும் ஏற்கனவே விலகி விட்டமை தெரிந்ததே.

---

### 3 ராட்சத

டாலர் பெறுமதியானவையாகும். இந்த உலங்குவனூர்திகளை பயன்படுத்துவதற்கான பயிற்சியையும் ரஷ்யா விமானிகள் சிறிலங்கா விமானப்படையினருக்கு விரைவில் பயிற்றுவிக்கவுள்ளனர்.

---

## ஓய்வூதியர் கவனத்திற்கு

இடம்பெயர்ந்த ஓய்வூதியர்களுக்கு நிவாரணம் கோரும் நோக்கமாக அவர்களின் முழுப்பெயர், நிரந்தர விலாசம், ஓய்வூதிய இலக்கம், தற்போதைய முகவரி, குடும்ப எண்ணிக்கை போன்ற தகவல்களை தாங்கள் வசிக்கும் பகுதி ஓய்வூதியர் சங்கங்கள் மூலமாக 26-3-93க்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைக்கவும்.

பொது செயலாளர்
வடமாநில
ஓய்வூதியர் சம்மேளனம்
904/5 பருத்தித்துறை வீதி
நல்லூர்

[4545]

---

புகைபிடிப்பதைத் தவிர்க்கவே இந்த நடவடிக்கை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

## 2000லிகிதர் வெற்றிடம் உடன்நிரப்பக் கோரிக்கை

(கொழும்பு)

அரச திணைக்களங்களில் காலியாகவுள்ள 2000லிகிதர் வெற்றிடங்களையும் உடனடியாக நிரப்புமாறு இலங்கை அரசாங்க லிகிதர் சங்கம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபை அமைச்சரைக் கடிதம் மூலம் கோரியுள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் எழுதிய கடிதத்தில் ஏற்கனவே நடந்த லிகிதர் சேவைத் தெரிவுப் பரீட்சையில் தோற்றியவர்களிடமிருந்து தெரிவுசெய்து லிகிதர் வெற்றிடங்களை நிரப்புமாறும் ஊழியர் பற்றாக் குறையால் அரசாங்க அலுவலகங்களில் வேலைகள் தாமதமாவதாகவும் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

---

### அன்னை பூபதி

ளன. வர்த்தக நிலையங்கள், அரச ஸ்தாபனங்கள், விடுதலைப் புலிகளின் முகாம்கள் தோறும் உணர்ச்சிபூர்வமாக கொண்டாடப்பட்டு வருகின்றன. அத்தோடு பூபதியின் நினைவாக சிரமதானங்களும் இடம்பெற்று வருகின்றன.

(86)

---

### நாகர்கோவில்

படுகிறது.

சிவலிங்கம் - ரவீந்திரன் (வயது 30), சிவலிங்கம் சொக்கன் (வயது 22) ஆகியோரே கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி வெள்ளிக்கிழமை மாலை கரைக்கு வந்தவர்களாவர். (யோ)

---

### ஜனாதிபதி

ருந்துஅகற்றப்பட்ட 52கடைக்காரர்களும், மின்மாற்றி அமைக்கப்படாததால் பாவனையாளர்களும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

---

### வீரச்சாவு

கம் சுதர்சன், சிவனேசன் வீதி, கேணியடி மீசாலை தெற்கு, மீசாலை என்பவரே வீரச்சாவு அடைந்தவராவர். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

நிதிகள் நேற்று 'வாதுவ, கப்பல் மூலம் வந்து சேர்ந்தனர்.

(யோ)

### தற்கொலை

[தென்மராட்சி]

குடும்பத் தகராறு காரணமாக மலத்தியோன் குடித்தவர் மரணமான சம்பவம் ஒன்று பளைப் பகுதியில் இடம் பெற்றது.

நேற்று பளைப்பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயாரான தி. சிவபூரணம் (வயது 36) என்பவர் மலத்தியோன் பவுடரைக் கரைத்துக் குடித்ததனால் இவரை உடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வரும் போது இடைவழியிலேயே மரணமானார்.

[86]

---

### வகுப்புகள் ஆரம்பம்

இன்று மாலை 2. 30 மணிக்கு நல்லூர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை (மங்கையர்க்கரசி)யில் பாலபண்டித, பிரவேசபண்டித வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. ஏற்கனவே பதிவுசெய்தோர் அனைவரும் தவறாது ஆரம்ப விழாவிற்குச் சமுகம் தருமாறு யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகின்றார்.

---

### இணைப்பை

எதிர்க்கின்றன என தெரிகிறது. எந்த அழுத்தம் வந்தாலும் இந்த நிலைப்பாட்டை மாற்றவேண்டாம்'' எனக் கோரியுள்ளார்.

வவுனியா தேரோ வண. சியம்பலகவேவா கருத்து தெரிவிக்கும்போது ''ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்களே வடக்கு-கிழக்கு இணைப்பை கோருகின்றனர். நாம் இப்போது எதிர்நோக்கும் பிரச்சினைக்கு வடக்கு கிழக்கு இணைப்பு ஒரு தீர்வல்ல'' எனக் கூறினார்

---

### கல்முனை

கைதுசெய்து தம்முடன் அழைத்துச் சென்றுள்ளனர். ஜோன் ஆப்ரகாம் (வயது 44) என்பவரே கடற்படையினரிடம் பிடிபட்டவராவர்.

மீனவர்களது மீன்பிடிப் படகையும் கடற்படையினர் தம்முடன் இழுத்துச் சென்றுவிட்டதாக தப்பிவந்தவர்களான ம. குணம், ம. அருளப்பு தேவதாஸ் ஆகியோர் தெரிவித்தனர். (க)

---

## தமிழ் ஆங்கிலம்

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும் அனுபவம் வாய்ந்த மொழிபெயர்ப்பாளர்கள் தங்களது அனுபவ அத்தாட்சிப்பத்திரங்களுடன் 25-03-93 வரை பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல் துறை அலுவலகத்திற்கு சமுகந்தரவும். தபால்மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

(சி/6242)

---

## நினைவில் நீங்கா...

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 02 – 08 – 1907

ஆண்டவன் அடியில் 20 – 02 – 1993

அமரர் **கதிரவேலு நல்லதம்பி**

அவர்கள்

ஆளாக்கி அன்பீந்து அருங்கல்வி தனையீந்து
தாழா துழைத்த எங்கள் தவப்பேறே - ஊழாலே
மடிந்தனையோ எம்மையா உன்நினைவால் நாமிங்கு
வடிக்கின்றோம் கண்ணீரைத் தான்!

★ ★ ★

உழுத்தம் புலத்தவனின் உறுபாதம் நீயடைய
வழுத்தியே வணங்குகிறோம் வள்ளலே - அழுத்தமுடன்
உன்நினைவை நாமேந்தி உன்கனவை ஆக்கிடுவோம்
என்றுமறை யாதுந்தன் பேர்!

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெரிய மாவடி,
சாவகச்சேரி.
22-03-1993.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்கள்.

(சி. 6241)